# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No.977/2024

| | |
|---|---|
| **சாட்சியின் வரிசை எண்** | மசா1 |
| **பெயர்** | முருகன் |
| **க/த.பெயர்** | கருப்புசாமி |
| **வயது** | 52 |
| **விலாசம்** | திரிசூலம், காஞ்சிபுரம் |
| **தொழில்** | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 12.01.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை மசாஆ1, விபத்து பதிவு சான்று நகல் மசாஆ2, மோட்டார் வாகன ஆய்வறிக்கை மசாஆ3,

குரோம்பேட்டை மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ குறிப்பு மசாஆ4, பார்வதி மருத்துவமனை பில்கள் மசாஆ5, ஊடுகதிர் படம் அசல் மசாஆ6, மாதிரி வரைபடம் மசாஆ7, குற்றபத்திரிக்கை மசாஆ8, முதலாம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் மசாஆ9, முதலாம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகத்தின் வாகன பதிவு சான்று நகல் மசாஆ10, காப்பீடு சான்று நகல் மசாஆ11, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ12, மனுதாரரின் பான் அட்டை நகல் மசாஆ13, மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் மசாஆ14.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த தேதி மற்றும் நேரம் 28.02.2023 மாலை 6 மணி முதல் 6.30 மணிக்குள் நடந்தது. நான் சாலையை கடக்கும் போது தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். அந்த இடத்தில் பாதசாரி கடக்கும் சிக்னல் இருந்ததா என்றால் இல்லை. தொழில் மற்றும் வருமானம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வலது கால் பக்கத்து கட்டை விரல் நீக்கப்பட்டதா என்றால் இல்லை. தற்போது நான் சாதரணமான காலணி தான் அணிந்து வந்துள்ளேன் என்றால் சாரிதான். இந்த விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் தான் நடந்தது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய முழு அஜாக்கிதை தான் என்றால் சரியல்ல. முறையான பாதசாரி கடக்கும் இடத்தில் கடந்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமாகிவிட்ட எந்த வித திறனிழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இன்றுநீதிமன்றத்திற்கு பேருந்தில் தான் வந்தேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமாகிவிட்டது வழக்கிற்காக பல்வேறு

**தலைப்புகளில் மிகை படுத்தி குறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த மனுவை 2ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**5 வது நீதிபதி**

**சென்னை**